Int. J. Adv. Multidiscip. Res. (2020). 7(8): 70-73

International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
DOI: 10.22192/ijamr Volume 7, Issue 8 -2020

ஆய்வுக்கட்டுரை

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2020.07.08.011

# குறுந்தொகை துறையாசிரியர்கள் வெளிப்படுத்தும் பெண் மாந்தர்களின் உரைநடை அமைப்பு

**Lt. முனைவர் இல. மாதரசி**
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை மற்றும் தேசிய மாணவர் படை அதிகாரி (ANO).
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி – 03

முக்கிய சொற்கள்

இளிவு– வருத்தம்
கூற்று– எமன்
இற்செறிப்பு - இல்லத்தில் அடைக்கப்படுதல்
கடிநகர் - இல்லம்

## ஆய்வுச் சுருக்கம்

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் கண்டவர்கள் நம் சங்ககால மக்கள், அம்மக்களின் அகம் புறம் சார்ந்த வாழ்க்கையை எடுத்தியம்புவன சங்க இலக்கியமாகும். சங்கப்பாக்கள் எழுதிய காலம் வேறு, அது தொகுக்கப்பட்ட காலம் வேறு, பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு புலவர்கள் பாடிய பாடல் அகம், புறம் என்ற அடிப்படையில் தொகுக்கப்பட்டன. திணை என்பது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்றும்; கூற்று என்பது அப்பாடலை யார் கூறுகிறார்கள்? என்றும்; துறை என்பது அப்பாடலில் இடம்பெறும் செய்தி யார் யாருக்குச் சொல்லப்படுகின்றது? எதற்காகச் சொல்லப்படுகின்றது? அச்செய்தி வழி படிப்போர் பெறும் கருத்து யாது? என்றும் விளக்கப்படுகின்றன. இவை இடம்பெறவில்லையெனில் அகப்பாடல்களைப் புரிந்து கொள்ள இயலாத நிலை ஏற்படும். இம்மூன்றில் துறை பற்றிய செய்திகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களுள் இடம்பெறும் குறுந்தொகைப் பாடல்களில், பெண் மாந்தர்களின் உரைநடை அமைப்பு மட்டுமே இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

## குறுந்தொகை: துறை விளக்கம்

எட்டுத்தொகை நூல்களுள் முதல் தொகை நூலாக இடம ் பெறுவது குறுந்தொகை. இதில் இடம்பெறும் அகப்பாடல்கள் பல உரையாசிரியர்களால் கையாளப்பட்டுள்ளது சிறப்புடையது. குறு + தொகை = குறுந்தொகை – குறுகிய பாடலடிகளையுடைய தனிப்பாடல்களின் தொகுப்பாகும். நாலடி சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையும் உடைய அகவற்பாக்களால் ஆன அந்நூல் 401 பாடல்களை உடையது.

எட்டுத்தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பட்டது இதுவேயாகும். 29 உரையாசிரியர்கள் 236 பாடல்களை மேற்கோளாக எடுத்தாண்டுள்ள பெருமைக்குரியது இந்நூல். இதில் வரலாற்றுச் செய்திகள் மட்டுமல்லாது கடையேழு வள்ளல்கள், குறுநில மன்னர்களின் கொடைத் தன்மைகள் பற்றிய செய்திகளும் இடம்பெறுகின்றன.

துறை என்பதில் அகப்பாடல்கள் வெளிப்படுத்தும் நிகழ்வை யார் யாரிடம் கூறுகின்றனர்? எதற்காகக் கூறுகின்றனர்? போன்றவை இடம்பெறும் சங்கப்பாடல்கள் எழுதிய காலமோ, தொகுத்த காலமோ வெவ்வேறானவை. அகப்பாடல்கள் செய்யுள் வடிவில் காணப்படுவதால் அடுத்த தலைமுறையினர் அவ்விலக்கியத்தைப் படிக்கும் பொழுது அதில் இடம்பெறும் செய்தி யார் யாரிடம் சொல்லப்படுகின்றது என்பது புரியாமல் இருக்கும் நிலையில் அதனை விளக்க, துறை என்ற

அமைப்பினைப் புலவர்கள் வடிவமைத்துள்ளனர். இத்துறைகள் கூற்று வகையால் அமைந்துள்ளன. துறைக் குறிப்புகள் ஆசிரியரின் புலமையை வெளிப்படுத்துகின்றன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய உரைநடை அமைப்பானது சங்க காலத்தில் தோன்றி விட்டது என்பதைத் துறையின் நடையமைப்பினை வைத்துக் கூறலாம். குறுந்தொகைத் துறை தொல்காப்பிய வழிப்பட்டதாகும்.

துறைகள் வழி சங்க கால அகவாழ்வில் நிகழ்ந்த முரண்பாடுகள், அறநிலை, உலகியல் பண்பு, அமைதி, அன்பு, வருத்தம் உண்மை போன்றவை புலப்படுகின்றன. (வ.சுப. மாணிக்கம், 1988)

**“உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**
**இல்லார் வாழ்க்கை இரவினும் இளிவெனச்**
**சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**
**சென்றனர் வாழி தோழி யென்னும்**
**கூற்றத் தன்னனகொலைவேல் மறவர்**
**ஆஊற்றிருந் தல்களி வழங்குநர்ச் செகுந்த**
**படுமுறை படுருந்து பார்த் திருக்கும்**
**நெடுமூ திடைய நீரில் ஆறெ”**
**(குறுந்தொகை 283)**

தலைவனின் பிரிவை நினைத்து வருந்தவில்லை. அவன் சென்ற வழியை நினைத்துத்தான் வருந்துகின்றேன் என்று தன்னைத் தேற்றிய தோழியிடத்துக் கூறுவதாகப் புலவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ இப்பாடலில் பாடியுள்ளார். தலைவன் செல்லும் பாலை நிலத்து வழியில் அவனுக்கு நேரும் துன்பத்தை நினைத்து வருந்தும் தலைவியை இப்பாடல் வழி அறியலாம்.

## பெண் மாந்தர்களின் வெளிப்பாட்டு நிலை

தலைவி மற்றும் தோழி கூற்றுகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தலைவி கூறும் துறையின் வழி தலைவன் மீது கொண்ட அன்பினையும் (குறுந்தொகை 2) பகற்குறி,

இரவுக்குறியில் ஏற்படும் இன்னல்களால் தலைவனைக் காணமுடியாமல் தவிக்கும் நிலையினையும் (குறுந்தொகை. 121, 313), தலைவனை நினைத்துத் தலைவி கனவு காணும் தன்மையும் (குறுந்தொகை, 30) தலைவனைத் தேடி நீ வரவில்லையெனின் இறந்துவிடுவேன் என தலைவி கூறும் நிலையினையும் (குறுந்தொகை,130), தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையும் (குறுந்தொகை, 141), பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் கார் பருவம் வந்தும் அவன் வராத நிலையினையும் (குறுந்தொகை 288), அவன் வராத நிலையினை எண்ணி ஊரார் தூற்றுவர் என வருந்தும் தலைவியையும் (குறுந்தொகை, 289), இரவுக்குறியில் வந்தொழுகும் தலைவனைப் பண்பிலர் என தோழி பழிக்க, தலைவியோ தான் தலைவன் மீது கொண்டு நட்பு அழியாத தன்மையுடையது என உரைப்பதையும் (குறுந்தொகை,313), தலைவனிடத்துக் கொண்ட அன்பினால் அல்லல்படும் தலைவியின் நிலையினைத் தலைவியின் துறைக்குறிப்பின் வழி அறிந்துகொள்ளலாம்.

தோழி கூறும் துறையின் வழி தலைவன் தலைவி மீது கொண்ட அன்பு நிலை (குறுந்தொகை,1), தோழி அறத்தோடு நிற்கும் நிலை (குறுந்தொகை, 26), தன்னைப் பிரிந்த விடத்துத் தலைவியை ஆற்றுதல் (குறுந்தொகை,30), தலைவனைத் தேடித் தருவேன் நீ வருந்தாதே எனக் கூறுதல் (குறுந்தொகை,130), தலைவி இற்செறிக்கப்பட்டபின் தலைவனிடத்து விரைந்து திருமணம் செய்து கொள்ளும்படி கூறுதல் (குறுந்தொகை,244), தலைவன் விரைவில் வருவார் என தலைவியைத் தேற்றுதல் (குறுந்தொகை,287), தலைவனைக் குறை கூறுதல் (குறுந்தொகை,380), தலைமகள் உடன்போக்கு நிலை (குறுந்தொகை,388), போன்றவை தோழியின் துறைக் குறிப்பின் வழி வெளிப்படுத்துகின்றன.

தன் தாயான செவிலியால் வளர்க்கப்பட்ட தலைவி மேற்கொண்ட களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையை மாற்றும் ஆற்றல் பொருந்தியவளாகத் தோழி படைக்கப்பட்டுள்ளாள். தலைவன், தலைவி செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுபவளாகவும், தலைவிக்கு எவ்வித துன்பம் நேராத வண்ணம் அவளை மற்றோர் பார்வையிலிருந்து காப்பாற்றுபவளாகவும் தோழி செயல்பாடானது விவரிக்கப்படுகின்றது.

## துறையில் தலைவன் தலைவி விளிக்கும் முறை

துறையின் வழி தலைவனைத் தலைமகன், கிழவன், நம்பெருமான் என்றும் தலைவியைத் தலைமகள், கிழத்தி என விளிக்கும் முறையைக் காணமுடிகின்றது.

தோழி கூற்றாக இடம்பெறும் துறையில் தலைவனைத் தலைமகள், தலைவன் (குறுந்தொகை 244,282,353) என விளிப்பதையும், தலைவியைக் கிழத்தி (குறுந்தொகை 282), என்று

விளிப்பதையும், தலைவி கூற்றில் தலைவனை நம்பெருமான் (குறுந்தொகை 288) என விளிப்பதையும் அறிய முடிகின்றது.

### கிளவன்

வினைவழி தலைவன் பிரிந்தவிடத்து (குறுந்தொகை,22, 282),

### தலைமகள்

பிரிவினை அழிந்த தலைமகள் (குறுந்தொகை, 130)
இற்செறிக்கப்பட்டவிடத்து (குறுந்தொகை,141)

### நம்பெருமான்

தலைவனைத் தோழி தூற்றுமிடத்து தலைவி கூறுதல் (குறுந்தொகை,288),

தலைவன் தலைவியை விடுத்து வினைவழி சென்றவிடத்து கிழத்தி என்றும், தலைவனைப் பிரிந்த நிலையை ஆற்றாளாகிய தலைவியை தலைமகள் என்றும், தலைவனைப் பிறர் தூற்றுமிடத்து 'நம்பெருமான்' என்றும், அக மாந்தர்கள் விளக்கப்படுகின்றனர். கிழத்தி, தலைமகள் என்பது தலைவன் தன் தலைவியை விளிக்கும் தன்மையும் அறியலாம்.

## துறையின் உரைநடை அமைப்பு

அகப்பாடலில் நிகழ்வு யார் யாரிடம் விவரிக்கப்படுகின்றது என இருந்தாலும் அந்நிகழ்வை மேலும் என்னவென்று விளக்க அ∴தாவது என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல்லாட்சியை குறுந்தொகை: 30,91,141,244,282,289,313,253,388,398 போன்ற பாடல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

"இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகும் தலைமகற்கு வரும் ஏதம் அஞ்சிப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான அது (வு) மறுத்து சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் கூறியது. அ∴தாவது,,,,,,,,,,,,,,,,, (குறுந்தொகை,141).

தலைவியின் இற்செறிப்பு நிகழ்கின்றது, தலைவியின் நிலையானது தலைவனிடத்து உரைக்க தோழியிடத்துக் கூறப்பட்ட இடத்தில் அ∴தாவது என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர் துறையாசிரியர்கள். இச்சொல்லின் வழி நிகழ்வினை மேலும் விளக்கமாக விவரிக்கின்றனர்.

தலைமகன் களவினை உரைக்கும் இடத்தும்; பரத்தையர் மாட்டும் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டி நிற்குமிடத்தும்; தலைவிக்கு இற்செறிப்பு நிகழுமிடத்தும்; தோழி தலைவனிடம் விரைந்து வரைவு கடாயது கூறுமிடத்தும், தலைவன் வினைவயிற் பிரிந்தவிடத்தும்; தலைவனை ஊரார் தூற்றுமிடத்தும், தலைவி இடற்பட மொழிந்த இடத்தும்; தலைமகன் பிரிந்து வினை முடிந்து வரும் வரை தலைமகளின் ஆற்றாமை கூறுமிடத்தும் 'அ∴தாவது' என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் துறையில் இடம்பெறும் அதன்கண், இதன்கண் என்ற சொல்லாட்சிகள் ஒரு நிகழ்வின் பொருட்டு இன்னொரு நிகழ்வு நிகழும் என்பதை வலியுறுத்துகின்றன.

ஒரே கூற்றில் இரு துறைகள் இடம்பெறுவதையும் காணமுடிகின்றன. வெள்ளி வீதியார் இயற்றிய பாடலில் பிரிவிடை அழிந்த தலைமகனைத் தோழி வற்புறுத்துதல், தோழியைத் தூது விடும்படி தலைமகன் தன் ஆற்றாமையைக் கூறுதல் என்ற இரண்டும் இடம்பெறுகின்றன.(குறுந்தொகை,130).

'ஆகு' என்ற துணைவினை, காண்கின்ற காலத்து, ஒழுகாநின்ற – நிகழ்காலம் காட்டும் புதிய இடைநிலைகள். தலைவனை – நம்பெருமான் என்றும், தலைவியை எம்பெருமாட்டி என்றும்; இல்லத்தை – கடிநகர் என்றும் துறை நடையில் காணப்படுகின்றது. உகர சாரியை – (பாகற்கு, பாங்கற்கு); அல்ல குறிப்பிட்டு மீள்கின்றன. வரைவிடைவைத்துப் பிரிவான், வினை முற்றினான் என வினையாலணையும் பெயர்களும் துறையில் இடம்பெறுகின்றன. துறையாசிரியர்களின் உரைநடையில் ஆகுதல் என்ற சொல்வடிவங்கள் அதிகமாக வருகின்றன. அகப்பாட்டிற்குத் துறை என்றளவில் இல்லாமல், துறையின் நயங்களை எடுத்துக்காட்டி உணர்ச்சி மேலிட எழுதும் போக்கினையும் துறையில் காணமுடிகின்றது.

உரைநடை வரலாறு பற்றிக் கூறுவோர் தொல்காப்பிய நூற்பாக்களைச் சுட்டி உரையாசிரியர் கூறிய எடுத்துக்காட்டு தந்து, சிலப்பதிகாரத்தில் வரும் உரைநடை கூற இறையனாரகப்பொருளின் உரைநடையைத் தந்து இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் நடை, மணிப்பிரவாள நடை, தற்கால நடை வளர்ச்சி என கூறுகின்றோமே தவிர இவற்றிற்கெல்லாம்

முன்னோடியாகத் துறை அமைத்த சங்ககாலச் சான்றோரை மறந்து விட்டதாகவே கருத முடிகின்றது.

சங்க காலச் சான்றோரின் செய்யுள் வடிவம் பார்த்தோமே தவிர உரைநடை அமைப்பை நோக்கவில்லை.அதற்குக்காரணம் துறையமைப்பும் செய்யுள் வடிவத்தோடு ஒத்திருந்ததேயாகும். அதில் இடம்பெறும் சொல்லாட்சிகள் படிந்த, சான்றோர் மட்டுமே படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளது. தற்கால உரைநடை அமைப்பு போல் இல்லாமல் உம், ஆக போன்றவை இணைந்து ஒரு வாக்கியம் பெரிய தொடர் அமைப்பாக விளங்குகின்றது (தமிழண்ணல், 1975).

## முடிவுரை

அகத்துறைகள் சில பொதுமரபுகளைக் கொண்டிருந்தாலும் அக மாந்தர்களுக்குத் தக்கவாறு துறையமைப்பானது உள்ளது. தலைவன் கூற்றில் இடம்பெறும் துறையில் தலைவி மீது கொண்ட அன்பு, தலைவியைப் பிரிந்து வினைமேற்சொல்ல முடியாமல் தன் நெஞ்சிற்குச் சொல்லும் நிலை போன்றவற்றையும் தலைவி கூற்றில் இடம்பெறும் துறையில் தலைவனின் வரவுக்காகத் தலைவி காத்திருக்கும் நிலை, தலைவனிடத்துக் கொண்ட அன்பு, தலைவனைத் தூற்றுவோரை ஏசும் நிலை, பிரிவாற்றாமை, நற்றாயின் இற்செறிப்பு போன்றவற்றையும்; தோழியின் கூற்றில் உள்ள துறையின் வழி தோழி தலைவனிடம் கையுறை மறுப்பது, தலைவன் தலைவியின் அன்பு நிலையை மற்றவருக்கு எடுத்துரைக்கும் அறத்தோடு நிற்றல் நிலை, தலைவனை வரைவு மேற்கொள்ளச் சொல்லும் நிலை, உடன்போக்கு மேற்கொள்ளும் நிலை, தலைவனை இடித்துரைக்கும் நிலை போன்றவை சில குறுந்தொகைப் பாடல்களில் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அகமாந்தர்களும் மேற்கொள்ளும் செயல்களைத் துறையாசிரியர்கள் கதைப்போக்காக உரைத்துச் செல்வதைக் குறுந்தொகை வழி அறிய முடிகின்றது.

## துணை நூற் பட்டியல


1. குறுந்தொகை– சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், கழகவெளியீடு,
2. ஒப்பியல் நோக்கு, வ. சுப. மாணிக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988
3. அகத்திணைக் கொள்கைகள் - ந. சுப்புரெட்டியார், பாரி நிலையம், 1981
4. தமிழ்க்காதல் - வ. சுப. மாணிக்கம்
5. சங்க இலக்கிய ஒப்பீடு, இலக்கியக் கொள்கைகள் - தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1975



| Access this Article in Online | |
|---|---|
| Quick Response Code | Website: www.ijarm.com |
| | Subject: Tamil |
| DOI:10.22192/ijamr.2020.07.08.011 | |

How to cite this article:
முனைவர் இல. மாதரசி. (2020). குறுந்தொகை துறையாசிரியர்கள் வெளிப்படுத்தும் பெண் மாந்தர்களின் உரைநடை அமைப்பு. Int. J. Adv. Multidiscip. Res. 7(8): 70-73.
DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2020.07.08.011